10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 317 வெள்ளிக்கிழமை 06 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com



## மகிழ்ச்சியில் மைத்திரி

கொழும்பு,ஏப்.06

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாக வாக்களித்தமை குறித்து ஜனாதிபதி மகிழ்ச்சியுடன் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் பதவி விலக வேண்டுமென கட்சி ஏகமனதாக தீர்மானித்திருந்தது. இந்த தீர்மானத்தை அறிவித்தோம். பிரதமர் பதவி விலகாத காரணத்தினால் நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தோம்.

இதேவேளை, கட்சியின் 06▶

## நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிரொலி

# சு.க அமைச்சர்களுக்கு ஆப்பு



கொழும்பு,ஏப்.06

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் அரசாங்கத்துக்கும் எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சரவை அந்தஸ்துள்ள, பிரதி, இராஜாங்க அமைச்சர்கள் 16 பேருக்கு எதிராக 16 நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை கொண்டுவருவதற்கான மகஜர் இன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அமைச்சுப் பதவிகளின் இன்பங்களை அனுபவித்துக் கொண்டு இதற்கு மேலும் அரசாங்க தரப்பில் 06▶

## கருமங்கள் மந்தகதியில்

கொழும்பு,ஏப்.06

முன்னைய அரசாங்கமானது ஜனநாயக பண்புகளிலிருந்து விலகியதன் காரணமாவே தற்போதைய அரசாங்கமானது பதவிக்கு வந்துள்ளது. இந்த அரசாங்கத்தின் சிந்தனையும் நடவடிக்கைகளும் முன்னைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளோடு ஒப்பிடுகையில் சாதகமாக இருந்தாலும் கருமங்கள் மிக மந்தகதியிலேயே இடம்பெறுகிறது.

இவ்வாறு நேற்றையதினம் தன்னை சந்தித்த ஐரோப்பிய குழுவினரிடம் தெரிவித்தார் இரா.சம்பந்தன்.

குறித்த சந்திப்பு நாடாளுமன்றத்தில் அமைந் துள்ள எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. 06▶

## புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்துக்கு வெற்றி

முல்லைத்தீவு,ஏப்.06

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உடையார் கட்டுக் குளத்தில் பொருத்திய நீர் .இறைக்கும் இயந்திர தொகுதிகளை இராணுவம் அகற்றியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்துஐயன் கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள உடையார்கட்டுக் குளத்தில் இருந்து படையினரின் முகாம் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு நீர் எடுப்பது சட்டத்துக்கு முரணானதும், மக்களுக்கு குறிப்பாக விவசாயிகள், நன்னீர் மீன்பிடித் தொழிலாளிகளுக்குப் பாதிப்பானது. எனவே இதை உடனடியாக நிறுத்துமாறு புதுக்குடியிருப்பு அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இதனை நிறுத்தி உபகரணங்களை அகற்ற உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில் இராணுவத்தினர்சம்மதமும் வழங்கியிருந்தனர். 06▶

## அமல் கருணசேகர கைது!

கொழும்பு,ஏப்.06

ஊடகவியலாளர் கீத் நோயரை கடத்திச் சென்று தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணசேகர குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

மூத்த ஊடகவியலாளர் கீத் நோயரை கடத்திச் சென்ற கும்பல் ஒன்று அவர் மீது தாக்குதல் நடத்தியிருந்தது. இந்தச் சம்பவம் 2008ஆம் ஆண்டு நடைபெற்றது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குற்ற விசாரணைப் பிரிவினரால்இராணுவ மேஜர்உட்பட இராணுவப் புலனாய்வு உறுப்பினர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் 6 பேரும் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். எனினும் அவர்கள் 6 பேரையும் கொழும்பு மேல் நீதிமன்றம் பிணையில் விடுவித்தது.

இந்நிலையில் முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரல் அமல் கருணசேகர குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். (த)

## பதவி விலகினார் அமைச்சர் கபீர்



கொழும்பு,ஏப்.06

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தாம் இராஜினாமா செய்துள்ளதாக அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

இராஜினாமா கடிதத்தை கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

கட்சி மறுசீரமைப்பு குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்கும் வகையில் இந்தத் தீர்மானத்தை எடுத்ததாகவும் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார். (த)

## வலி.வடக்கில் 650 ஏக்கருக்கு விடுதலை

யாழ்ப்பாணம்,ஏப்.06

வலிகாமம் வடக்கில் எதிர்வரும் 16 ஆம் திகதி 650 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளதாக மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் பொன்னையா சுரேஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை வலி.வடக்கில் மீள் குடியேற்ற அமைச்சின் வீட்டுத்திட்டத்தை கையளிக்கும் நிகழ்வின் போதே அவர் இதனை 06▶



## பதவி விலகல் கடிதங்கள் ஜனாதிபதியால் நிராகரிப்பு



கொழும்பு,ஏப்.06

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களின் பதவி விலகல் கடிதங்களை நிராகரித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவர்களைத் தொடர்ந்தும் அரசில் நீடிக்குமாறு வலியுறுத்தினார்.

இந்தத் தகவலை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் 06▶

## சிங்கள மயமாக்கலுக்கு எதிராக முல்லையில் கவனயீர்ப்புப் போர்

யாழ்ப்பாணம்,ஏப்.06

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாயபுர மற்றும் வெலி ஓயா, கிதுள் ஓயா பகுதிகளில் சட்டவிரோத சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுவதை எதிர்த்து கவனயீர்ப்பு போராட்டத்தை வடமாகாண சபையினர் முன்னெடுக்கவுள்ளனர்.

எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்த போராட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக முன்னெடுக்கப்படவுள்ளது.

வடமாகாண சபையின் 120ஆவது 06▶

## சாவகச்சேரியில் கூட்டாட்சி பளையில் தனியாட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.06

ஈ.பி.டி.பி, சுதந்திரக்கட்சி, மற்றும் ஐ.தே.கவின் ஆதரவுடன் சாவகச்சேரி பிரதேச சபையினை த.தே. கூட்டமைப்பு கூட்டாட்சியை ஏற்படுத்திய அதேவேளை, பளையில் தனியாட்சியை நிறுவியுள்ளது.

31 உறுப்பினர்களை கொண்ட சாவகச்சேரி பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13 ஆசனங்களையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 6 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி 4 ஆசனங்களையும் சிறிலங்கா சுதந்திர கட்சி 3 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 2 ஆசனங்க 06▶

# விகாரைக்கு ஓடிய பிரதமர்!



கொழும்பு, ஏப். 06

கூட்டு எதிர்ணியினரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்த பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கங்காராமய விகாரைக்குச் சென்று வழிபாடு நடத்தி உள்ளார்.

பிரதமருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 46 வாக்குகளால் தோல்வியடைந்தது.

நேற்றுமுன்தினம் 9.30 மணியளவில் ஒவ்வொருவராக பெயர் அழைத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. முடிவு சுமார் அரை மணிநேரத்தில் அறிவிக்கப்பட்டு, நாடாளுமன்றம் ஒத்திவைக்கப் பட்டது.

இதையடுத்து, உடனடியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மனைவி மைத்ரி விக்கிரமசிங்கவுடன் கங்காராமய விகாரைக்குச் சென்று வழிபாடு நடத்தினார். அவருடன் பெருமளவான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களும் அங்கு குழுமியிருந்தனர். (ஆ)

## ஹெரோயின்தாரிக்கு ஆயுள் தண்டனை!

கொழும்பு, ஏப். 06

ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட 33 வயதுடைய நபர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் ஆயுள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு 14 பிரதேசத்தைச் சேர்ந்த சங்கர் கதீஷ்வரன் என்பவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி குறித்த நபர் மாளிகாவத்தைப் பிரதேசத்தில் வைத்து, 8.9 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் போதைத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து, சட்டமா அதிபரால் அவர் மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது. நீண்ட காலமாக இடம்பெற்று வந்த விசாரணைகளின் பின்னர் குற்றவாளியாக இனங்காணப்பட்ட பிரதிவாதிக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## கடந்த 3 மாதங்களில் 720 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஏப். 06

கடந்த மூன்று மாதங்களில் சமூக ஊடகங்கள் சம்பந்தமாக 720 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு கூறியுள்ளது.

அந்த முறைப்பாடுகளில் அதிகமானவை பேஸ்புக் சம்பந்தமாகக் கிடைத்திருப்பதாக அந்தப் பிரிவின் ஊடகப் பேச்சாளரும் பாதுகாப்புப் பொறியியலாளருமான ரொஷான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

"அந்த முறைப்பாடுகளில் நூற்றுக்கு 75 வீதமானவை போலிக் கணக்குகளை இயக்கிச் செல்வது தொடர்பானவை. டுவிட்டர், இன்ஸ்டகிராம் போன்ற சமூக வலைத்தளங்கள் சம்பந்தமாகவும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இந்த முறைப்பாடுகள் சம்பந்தமாக தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# மகாவலியால் காணி அபகரிப்பு!

## வடக்கு முதலமைச்சர்



யாழ்ப்பாணம், ஏப். 06

மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் மூலம் முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் அரசாங்கம் காணி அபகரிப்பை மிக வேகமாக மேற்கொள்கிறது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபை அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கரை துறைப்பற்றுக் காணிகள் யாவும் மகாவலியால் விழுங்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே மணலாறு வெலிஓயா ஆகி விட்டது. மகாவலி அதிகாரசபை சட்டம் 1979 ஆம் வருடத்தின் 23 ஆவது சட்டமாகும். அதன் முக்கிய நோக்கங்கள் உணவு உற்பத்தி, நீர்சக்தி உற்பத்தி, காணியில்லாதவர்களுக்கு காணி வழங்கல் மற்றும் வெள்ளத்தடுப்பு ஆகியனவாகும். குறித்த சட்டத்தின் அதிகார வரம்பினுள் இருக்கும் வனங்கள், வனவிலங்குகள், நீர்ப்பாசனம், விவசாய சேவைகள், விவசாயம் போன்றவற்றின் நிர்வாகமும் அவற்றைக் கொண்ட நிலங்களும் மகாவலி அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்குள் வருவனவாகும்.

குறித்த சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் மகாவலிக்குப் பொறுப்பான அமைச்சர் ஜனாதிபதியின் ஒப்புதலுடன் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டளையின் மூலம் எந்த ஒரு நிலப் பகுதியையும் விசேட நிலப் பகுதியாகப் பிரகடனப்படுத்தலாம். இந்தக் கட்டளைக்கு நாடாளுமன்றில் பின்னர் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

மாகாவலி அதிகார சபைச் சட்டம் எதனையும், கணக்கில் எடுக்காது தான் தோன்றித் தனமாக தனது வேலைகளைச் செய்து கொண்டு போகின்றது. காணிகளைக் கைவசம் வைத்திருப்பது மட்டுமன்றி பயனாளிகளுக்குக் கைமாற்றவும் அது உரித்துக் கொண்டிருக்கின்றது. அண்மையில் அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்த போது மகாவலி அதிகார சபைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தேன். அவர் அதுபற்றி பரிசீலிப்பதாக உத்தரவாதம் அளித்துள்ளார்.

ஆனால், அது அவ்வளவு சுலபமன்று. புதியதொரு சட்டத்தை மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்ட பதின்மூன்றாம் திருத்தச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தயாரித்து ஏற்ற பின்னரே, மகாவலி அதிகார சபைச் சட்டத்தில் கைவைக்க முடியும். அதற்கிடையில் முல்லைத்தீவை முற்றிலும் தன்வசம் கொண்டு வந்துவிடும் மகாவலி அதிகார சபை. இது தான் யதார்த்தம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# கைது உத்தரவிலிருந்து தப்பினார் கோத்தபாய!

கொழும்பு, ஏப். 06

பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை கைது செய்வதற்கு எதிரான இடைக்காலத் தடை உத்தரவு ஐந்தாவது தடவையாகவும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதிவரை இந்த இடைக்கால உத்தரவை நீடிப்பதற்கான மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று வியாழக்கிழமை நீடித்துள்ளது.

அத்துடன் இந்த ரிட் மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி நடத்துவதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

டீ.ஏ. ராஜபக்சவின் ஞாபகார்த்தமாக அருங்காட்சியம் ஒன்றை அமைப்பதற்காக அரச நிதியிலிருந்து 83 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்தார் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ச மீது குற்றச்சாட்டு காணப்படுகிறது.

இது தொடர்பாக விசாரணையை நடத்திவரும் பொலிஸ் நிதி மோசடி பிரிவினர், கோத்தாபாய ராஜபக்சவை கைது செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தென்னிலங்கையில் தகவல்கள் வெளியாகின. இதனை அடுத்து, தன்னைக் கைது செய்வதற்கான முயற்சிகளுக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோத்தபாய ராஜபக்ச கடந்த வருடம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவைத் தாக்கல் செய்தார்.

இந்த ரிட் மனு மீது கடந்த 4 தடவைகள் விசாரணை நடத்தப்பட்டு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுவந்த நிலையில், மனுமீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கமைய மனுமீதான விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பிரீத்தி பத்மன் தலைமையிலான இருவரடங்கிய நீதியரசர்கள் குழு முன்பாக இடம்பெற்றது.

இந்த நிலையிலேயே, இடைக்கால உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# மகாவலி அதிகாரசபை நியமனம் வழங்கல்




கொழும்பு, ஏப். 06

மகாவலி அதிகார சபைக்குப் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 147 உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க, மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சரத் சந்திரசிறி விதான உள்ளிட்ட பணிப்பாளர் சபையினர் கலந்துகொண்டனர்.

இதன்போது "நாட்டின் அபிவிருத்திக்காகவும் மக்களின் நலனுக்காகவும் மகாவலி அதிகார சபை எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் புதிய உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என நம்புகிறேன்" என ஜனாதிபதி தெரிவித்தார். (ஆ)

# போதனாசிரியர்கள் ஐவருக்கு நியமனம்!



யாழ்ப்பாணம், ஏப். 06

வடக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் புதிய தையல் போதனாசிரியர்கள் ஐவருக்கான நியமனக் கடிதங்களை ஆளுநர் றெயினோலட்கூரே வழங்கினார்.

யாழ்ப்பாணம் சுண்டுகுளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இந்த நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், முதலமைச்சரின் அமைச்சு செயலாளர் ரூபினி வரதலிங்கம், கிராம அபிவிருத்தி திணைக்களப் பதில் பணிப்பாளர் நளாயினி இன்பராஜ் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ-11)

# 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம் கடற்படை அதிகாரிக்கு பிடியாணை

கொழும்பு,ஏப்.06

வெள்ளை வானில் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேரது வழக்கு விசாரணையில் தலைமறைவாக உள்ள சந்தேக நபரான கடற்படையின் லெப்டினண்ட் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சியை கைது செய்வதற்காக மீண்டும் இரண்டு பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.



கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதவான் லங்கா ஜயவர்தனவினால் குறித்த சந்தேக நபருக்கு எதிராக திறந்த பிடியாணை மற்றும் சர்வதேச பிடியாணை என்பன நேற்று வியாழக்கிழமை பிறப்பிக்கப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிகாலமான 2008, 2009ஆம் ஆண்டுகளில் கொழும்பு கொட்டாஞ்சேனை மற்றும் தெஹிவளை பகுதிகளில் 5 மாணவர்கள் உட்பட 11 தமிழர்கள் வெள்ளை வானில் கடத்திச்செல்லப்பட்டு, காணாமல்ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்னிலைப் படுத்தப்பட்டபோது எதிர்வரும் 12ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணையில் கலந்து கொண்ட சாட்சிகள் சார்பிலான சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

"11 மாணவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேலதிக விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையில், கடற்படையில் இருந்த ஆனந்த குருகேயிடம் கடந்த 3ஆம் திகதி வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும், அதன்படி சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி என்ற சந்தேக நபர் கடற்படையில் சேவையிலிருந்த காலத்தில் தப்பிச்சென்றமை தொடர்பாக விசாரணை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் கடற்படைக்கு அறிவிக்காமல் சேவையிலிருந்து விலகி தலைமறைவாகியதாக வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு மன்றிற்கு அறிவித்தது. வழக்கு தொடர்பான மேலதிக விபரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்ததாக நீதவான் தெரிவித்தார். மேலும் தலைமறைவாகியுள்ள சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சிக்கு எதிராக மீண்டும் திறந்த பிடியாணை மற்றும் சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அதே வேளை, நேற்று மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட இரண்டு சந்தேக நபரையும் எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்" என்றார்.

## மூன்று மாதத்தில் 720 முறைப்பாடுகள்

கொழும்பு,ஏப்.06

கடந்த மூன்று மாத காலத்தில் சமூக ஊடகங்கள் சம்பந்தமாக 720 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு கூறியுள்ளது.

அந்த முறைப்பாடுகளில் அதிகமானவை பேஸ்புக் சம்பந்தமாக கிடைத்திருப்பதாக அந்த பிரிவின் ஊடகப் பேச்சாளர் பாதுகாப்பு பொறியிலாளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவித்தார்.

இவற்றில் 75 வீதமானவை போலிக் கணக்குகளை இயக்கிச் செல்வது தொடர்பானவை என கணினி அவசர நடவடிக்கைப் பிரிவு கூறியுள்ளது.

டுவிட்டர், இன்ஸ்டகிராம் போன்ற சமூக வலைத்தளங்கள் சம்பந்தமாகவும் கடந்த மூன்று மாத காலத்தில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அந்த முறைப்பாடுகள் சம்பந்தமாக தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கைப் பிரிவு கூறியுள்ளது.

## பொதுமக்களிடம் 10 கோடி மோசடி வசமாக சிக்கினார் பெண்

கொழும்பு,ஏப்.06

இலங்கையின் பிரதான காப்புறுதி நிறுவனம் ஒன்றின் பெயரில் போலி ஆவணங்களைத் தயாரித்து , பொது மக்களிடம் பண மோசடி செய்வதற்கு உதவிய குற்றச்சாட்டில் பெலிஸ் மோசடி விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்ட பெண் ஏப்ரல் 11 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


60 வயதான ஐராங்கணி மல்லிகா பெர்னாண்டோ என்ற பெண் 10 கோடி ரூபாவுக்கும் அதிக மோசடியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் மோசடி விசாரணைப் பிரிவின் அதிகாரி ஒருவர் கூறினார்.

பணம் முதலீடு செய்யும் போது அதிக வட்டி வழங்குவதாகக் கூறி குறித்த பெண் மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

சந்தேகநபரான பெண்ணுக்கு எதிராக தற்போது மிரிஹாண, பாணந்துறை, மொரட்டுவ பொலிஸ் விஷேட குற்றப் புலனாய்வு பிரிவுகளால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி கூறினார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான தோன நிஷாத் தனுஷ்கவை இன்னும் கைது செய்யவில்லை என்றும், அவர் தலைமறைவாகி இருப்பதாகவும் அவர் கூறினார்.

தமது நிறுவனத்தின் பெயரில் போலி ஆவணங்களை தயாரித்து பண மோசடியில் ஈடுபடுவதாக சம்பந்தப்பட்ட நிறுவனத்தினால் முதலில் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து பொது மக்களிடம் இருந்தும் முறைப்பாடுகள் கிடைத்ததாகவும், அதன்படி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி கூறினார்.



## மான் வேட்டையாடிய வழக்கில் சல்மான்கானுக்கு ஐந்து வருட சிறை

ஜோத்பூர்,ஏப்.06

அரிய வகை மான்களை வேட்டையாடிய வழக்கில் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட நடிகர் சல்மான்கானுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் அருகே உள்ள கான்களி கிராமத்தில் "ஹம் சாத் சாத் ஹயன்" என்ற இந்திப் படத்தின் படப்பிடிப்பு 1998ஆம் ஆண்டு ஒக்ரோபர் 2ம் திகதி நடந்தது.

அன்று இரவு அரிய வகை மான்கள் இரண்டை படப்பிடிப்பில் இருந்த நடிகர் சல்மான்கான் வேட்டையாடியதாக குற்றம் சாட்டப்பட்டது. இதேபோல நடிகர் சயீப் அலிகான், நடிகைகள் சோனாலி பிந்த்ரே, தபு, நீலம் ஆகியோர் மீதும் குற்றம் சாட்டப்பட்டது.

ஜோத்பூர் நீதிமன்றில் நடந்து வந்த இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. மான்வேட்டை வழக்கில் சல்மான்கான் குற்றவாளி என நீதிபதி அறிவித்தார். அவரை தவிர மற்ற அனைவரும் விடுவிக்கப்பட்டனர். சில மணிநேரத்திற்கு பின்னர் சல்மானுக்கான தண்டனை விபரங்களை நீதிபதி அறிவித்தார்.

5 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் 10 ஆயிரம் ரூபாய் அபராதம் அவருக்கு விதிக்கப்பட்டது. இதனை அடுத்து, அவர் உடனடியாக சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரது தரப்பில் பிணை கோரி மனு தாக்கல் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரொலி Ethiroli

வெள்ளி, 06 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

## எல்லை மீறல் நியாயமாகாது

சும்மா இருந்த யானையை, தாமரை மொட்டு உசுப்பேற்றி இப்போது ஓய்ந்திருந்த ஐ.தே.கவுக்கு குளுக்கோஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆட்சி கையில் இருக்கும் போதே, உள்ளூராட்சித் தேர்தலில் மஹிந்த அணியிடம் மரண அடிவாங்கியதால், அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கைகளை என்ன முகத்தோடு மக்களிடம் முன்னெடுப்பது என்று தெரியாமல் விழி பிதுங்கி நின்ற ஐ.தே.க வுக்கு, நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டிருப்பது நிமிர்ந்து நடக்கும் தைரியத்தைக் கொடுத்துள்ளது.

அந்த நம்பிக்கையின் விளைவுதான், ஊடகமொன்றின் வாசலில் கொளுத்தப்பட்ட வெடிகள். நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட நாள் தொடக்கம், இந்த ஆட்சியை மாற்றப் போகிறோம் என்கிற தோரணையில் ஊடக ஒழுக்கங்கள் அத்தனையையும் தொலைத்துவிட்டு, ரணிலைக் குறிவைத்து தாக்கியது குறித்த ஊடகக் குழுமம். நாட்டின் தலைவிதியையே நாம் தான் தீர்மானிப்போம் என்கிற ரீதியில் அந்த ஊடகம் நடத்திய வசைபாடல்களும், திசை திருப்புதல்களும் முகத்தைச் சுழிக்கச் செய்பவை. அந்த ஆத்திரத்தின் வெளிப்பாடாகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டவுடன் ஐ.தே.க ஆதரவாளர்களால், குறித்த ஊடக நிறுவனத்தின் வாசலில் ஆயிரக்கணக்கான வெடிகள் கொளுத்தப்பட்டன. பிரேரணையைக் கொண்டுவந்த மஹிந்த அணியை விடவும், இந்த 'சக்திவாய்ந்த' ஊடகத்தின் மீதே ஐ.தே.கவினர் கடுப்பில் இருந்தனர். அதையெல்லாம் வெடி 1 வடிவில் காட்டி விட்டனர். ஆனால், சாதாரண சீனவெடிச் சத்தங்கள் கேட்டவுடனேயே ஏதோ 'மல்ரிபரல்' அடிப்பது போல, அந்த ஊடக நிறுவனம், தன் ஊழியர்கள் வெளியேற முடியாமல் இருப்பதாக பாதுகாப்புக்கு பொலிஸை அழைத்ததுடன், தமது நிறுவன முன்பக்கம் தகர்க்கப்பட்டு விட்டதாகவும் கூவியது. ஆனால் முன்வாசலில், வெடிகளின் கருகிய காகிதங்கள் மட்டுமே பறந்துகொண்டிருந்தன. நிறுவனத்துக்கு எவ்வித சேதங்களும் ஏற்படாமலேயே, வானத்துக்கும் பூமிக்கும் எகிறிக் குதித்த அந்த ஊடகம் தான், நாட்டின் தலைவிதியையே மாற்றப்போவதாக வீராப்பு பேசியிருந்தது.

ஊடகங்கள், மக்களின் பிரச்சினைகளைப் பேசவேண்டும். மக்களின் குரலாக இருக்க வேண்டும். அதிகாரம் செய்யும் தவறுகளைத் தட்டிக் கேட்க வேண்டும். ஆனால், ஊடகம் தன் எல்லையை மீறி, தன்னிஷ்டப்படி ஒரு நாட்டையே ஆட்டிவைக்க நினைத்தால், முடிவுகள் விபரீதமானவையாகவே இருப்பது வரலாறு.

ஊடக சுதந்திரம் வேண்டும், கருத்துரிமை வேண்டும் என எல்லோரும் போராடுகின்றோம். ஆனால், கைவசம் இருக்கும் உரிமைகளைக் கூட துஷ்பிரயோகம் செய்தால், அதைக் காரணம் காட்டியே ஊடகங்கள் மீதான பிடியை இன்னும் இறுக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

நாட்டில் தீர்க்கப்படாமல் இன்னும் ஆயிரமாயிரம் பிரச்சினைகள் மக்களுக்குண்டு. அதையெல்லாம் கண்டு கொள்ளாமல், அதிகாரத் தரப்பில் உள்ளவர்களோடு மட்டும் வலிந்து, வீம்புக்கு மல்லுக்கட்டுதலும், அதற்காக ஊடக தர்மத்தைப் புதைப்பதும் ஒருபோதும் நியாயமாகிவிடாது. அதனால் தான், அந்த ஊடக வாசலில் வெடி கொளுத்தி ஐ.தே.கவினர் கொண்டாடியபோது, அதனை ஏனைய ஊடகங்கள் பார்த்துக் கேலியாகச் சிரித்தனவே தவிர, சக ஊடக நிறுவனத்தை அச்சுறுத்தும் வகையில், வெடிகள் கொளுத்தப்பட்டதாக ஏனைய ஊடகங்கள் கிளர்ந்தெழவில்லை. அதனால் தனியாக நின்று இனிவரும் காலங்களில் எழக்கூடிய சவால்களையும் குறித்த ஊடகம் சந்திக்கவேண்டியுள்ளது. வாயில் வந்ததையெல்லாம் தெரிவித்துவிட்டு, அதனைத் தீர்மானிக்கச் சொல்லுமாறு வலிந்து திணிக்கும் ஊடகக் கலாசாரத்தை மாற்றி, மக்களுக்கான ஊடகமாகச் செயற்படுதலே மக்களுக்கு இப்போதைக்கு அவசியம். இதனைத் தெரிவிக்க மட்டுமே எம்மால் முடியும். தீர்மானிப்பது அவர்களல்லவா.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

## இன்று நாளும் கோளும்

06.04.2018 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் பங்குனி மாதம் 23 ஆம் நாள்

சஷ்டி மு.ப. 10.27 வரை | கேட்டை பி.ப. 01.00 வரை | குளிகை 07 .30 - 09.00 வரை

இராகுகாலம் 10.30 - 12.00 | சுபநேரம் காலை 09.30 - 10.30 | எமகண்டம் காலை 03.00 - 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பேராசை | தொல்லை | கவனம் | யோகம் | கவலை | ஆர்வம் | சந்தோசம் | நிறைவு | சலனம் | களிப்பு | வாழ்வு | தடை |



# காட்டிக் கொடுத்தார் ஜனாதிபதி மைத்திரி!

## டுவிட்டரில் புலம்பிய நாமல்

கொழும்பு, ஏப்.06

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் காட்டிக் கொடுக்கும் பழக்கத்தை, அவர் மறுபடியும் உறுதிப் படுத்தி உள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிரான நம்பிக் கையில்லாத் தீர்மானம் நேற்று முன்தினம் 46 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப் பட்டது.

இது தொடர்பில் நாமல் ராஜபக்ச, தனது டுவிட்டர் பக்கத்தில் கடுமையாக விமர்சித்துள்ளார்.

"இந்தப் பிரேரணைக்கு ஒத்துழைக்குமாறு சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை துண்டி விட்டுப் பின்னர் தனது நிலைப் பாட்டை ஜனாதிபதி மாற்றிக் கொண்டார். இதன் மூலம் ஐக்கிய தேசியக்கட்சியையும், சுதந்திரக் கட்சியையும் ஜனாதி பதி காட்டிக்கொடுத்து விட்டார்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)




# கல்வெட்டு கண்டுபிடிப்பு

அநுராதபுரம், ஏப்.06

அநுராதபுரம் - உத்தர சாலிய ஸ்ரீ தலதா விகாரையில் ஆயிரத்து 300 ஆண்டுகள் பழைமையான கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கல்வெட்டில், 8 ஏக்கர் வயல் ஒன்றில் பிக்கு மடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காகப் பூஜை நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை, ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சிப் பிரிவின் பேராசிரியர் கருணாசேன ஹெட்டி ஆராச்சி உறுதி செய்துள்ளார். (ஆ)

# மேயரானார் சரவணபவன்!



மட்டக்களப்பு ,ஏப்.06

மட்டக்களப்பு மாநகர சபையின் 14 ஆவது மேயராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த தி.சரவணபவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு மேயர் மற்றும் பிரதி மேயரைத் தெரிவு செய்யும் சபையின் முதலாவது அமர்வு நேற்று நடைபெற்றது. கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.எம்.சலீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மேயர் தெரிவுக்காக கூட்டமைப்பின் சார்பாக தி.சரவணபவனும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் எஸ். சோமசுந்தரம் ஆகிய இருவரின் பெயர்களும் பிரேரிக்கப்பட்டன. இதில் சரவணபவனுக்கு ஆதரவாக 25 வாக்குகளும், சோமசுந்தரத்துக்கு ஆதரவாக 11 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதில் 2 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இதேவேளை, பிரதி மேயராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் க.சத்தியசீலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஆ)

# பிரதமர் ரணிலுக்கு இறுதிச் சந்தர்ப்பம்!

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.06

புரையோடிப்போயுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு இறுதியாக ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை 46 மேலதிக வாக்குகளால் நேற்றுமுன் தினம் நாடாளுமன்றில் தோற்கடிக்கப் பட்டது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக சிறுபான்மை கட்சிகள் வாக்களித்தன. இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரதமர் எதிர்வரும் இரண்டு வருடங்களில் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்தால், அடுத்த தேர்தலை அவர் மன உறுதியுடன் சந்திக்க முடியும். அண்மைக் காலமாக எதிர்க்கட்சிகளால் இந்த நாட்டு மக்களை ஏமாற்றுவதற்கு நடத்தப்பட்ட நாடகம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு பணிகளை விரைவாக நடத்தி, அதிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்." என அவர் வலியுறுத்தி உள்ளார். (ஆ)

# தோல்வியும் வெற்றியே !

## மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 06

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிரான நம்பிக் கையில்லா பிரேரணை தோல்வியடைந்தாலும், தமக்கு வெற்றியே என்று, முன்னாள் ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு முடிந்த பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

" சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தால் முடிவு மாறியிருக்கும். முதலில் எமக்கு 54 வாக்குகள்தான் இருந்தன. இப்போது, 76 வாக்குகளாக அதிகரித்துள்ளது. இது எமக்கு வெற்றி தான்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# 63 மாணவர்கள் பாதிப்பு

வெல்லவாய, ஏப்.06

வெல்லவாய- வெஹேரகல பகுதியில் இருந்து அநுராதபுரம் நோக்கிக் கல்விச் சுற்றுலாச் சென்ற 63 மாணவர்கள் உணவு ஒவ்வாமை காரணமாக சுகயீனமுற்ற நிலையில், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மொனராகலை பாடசாலை ஒன்றைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. (ஆ)

# குடும்பஸ்தருக்கு எமனான மின்சாரம்!

வவுனியா, ஏப். 06

வவுனியா - பறயனாலங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு, பன்றிக்கு மின்சாரம் வைப்பதற்கு முயன்ற குடும்பஸ்தர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

பறயனாலங்குளத்தைச் சேர்ந்த பெரியசாமி முத்துலிங்கம் (வயது- 58) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மாலை 7 மணியளவில் தனது வீட்டுக்குப் பின்பக்கமுள்ள காட்டுப்பகுதியில் பன்றிக்கு மின்சாரம் வைப்பதற்கு முயன்றபோதே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது.

அவருடைய மரணம் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்களை உறவினர்கள் தெரிவித்தமையால் சடலம் இன்னும் மருத்துவமனையிலேயே வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஆ)

# கழிவகற்ற புதிய வழி



கொழும்பு, ஏப்.06

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் ஆகிய பொருட்களுக்கான புதிய மீள்சுழற்சி செயல்முறை ஒன்றை கடற்படையினர் அறிமுகப்படுத்தி உள்ளனர்.

கழிவு முகாமைத்துவத்துக்கு சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் கடற்படையின்கடல்சார்பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவினரால் மூன்று கட்டங்களை உள்ளடக்கியதாக இந்தப் புதிய முறை உருவாக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டத்தில் பூந்தோட்ட அலங்காரங்களுக்காக இந்தக்கழிவுப்பொருட்கள் பய்ன்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்ட நடவடிக்கையாகக் கடற்படை நலன் புரித்திட்டத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் புதிய தொழில் நுட்பத்தைப் பகிர்ந்து கொள்ளல், அதனை விரிவுபடுத்தல் மற்றும் முறையான கழிவகற்றல் ஆகிய நடவடிக்கையின் மூலம் அதனைப் பயன்மிக்க ஒரு சிறந்த வளமாக பயன்படுத்தல் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப் பட உள்ளன. மூன்றாம் கட்ட செயற்பாட்டை கடற்படை ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திக்கான பிரிவின் உதவியுடன் முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஆ)



# குடை சாய்ந்தது மணல் லொறி!

மஹியங்கனை,ஏப்.06

மஹியங்கனைப் பகுதியிலிருந்து ஹட்டன் நோக்கிச் சென்ற மணல் லொறி ஒன்று நேற்று இரவு குடைசாய்ந்ததில், லொறியின் சாரதி படுகாயம் அடைந்துள்ளார்.

குறித்த லொறி வீதியை விட்டு விலகி மண்மேட்டில் மோதியதாலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

பலத்த காயமடைந்த சாரதி நுவரெலியா மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ஆ)

# சபைக்குள் 'சம்பந்தன் செல்பி'

கொழும்பு, ஏப்.06

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நேற்றுமுன்தினம் ஆரம்பமான வேளை, நாடாளுமன்றம் பரபரப்பாகவே காணப்பட்டது. அப்போது அவைக்குள் இருந்த உறுப்பினர்கள் குழுவாகக் கூடிநின்று பேச்சுகளில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறான பரபரப்புக்கு மத்தியிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மஜந்த திஸாநாயக்க, பிரதான எதிர்க்கட்சித் தலைவரான இரா. சம்பந்தனுடன் சபைக்குள் 'செல்பி' எடுத்து மகிழ்ந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மஜந்த திஸாநாயக்க, அவரின் இருப்பிடத்தை நோக்கி சம்பந்தன் வந்தபோது அவரைச் சந்தித்து ஏதோ பேசிய பின்னரே இந்த செல்பியை எடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்க் கட்சித் தலைவரும் சிரித்தபடியே போஸ் கொடுத்துள்ளார்.

மயந்த திஸாநாயக்க எம்.பி. அமைச்சர் நவீன் திஸாநாயக்கவின் தம்பி'என்பது குறிப்பிடத்தக்கது.

(ஆ)

# வெட்கம் இருந்தால் விலகி விடுங்கள்!

## சு.கவிடம் ஐ.தே.க. சவால்




கொழும்பு, ஏப்.06

வெட்க உணர்வு என்ற ஒன்று இருந்தால் சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், போக்குவரத்து அமைச்சருமான நிமல் சிறிபாலடி சில்வா உட்பட சுதந்திரக் கட்சியினர் அமைச்சுப் பதவியிலிருந்து விலகவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்த தேசிய போக்குவரத்துத் தொடர்பான சட்டங்களைக் கடுமையாக்கும் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"மாலபே பிரதேசத்தில் அண்மையில் தனியார் பஸ் சாரதி ஒருவர்மீது பொதுஜன முன்னணியைச் சேர்ந்த தென்மாகாண சபை உறுப்பினர் ஒருவரும், அவரது மனைவியும் சேர்ந்து தாக்குதல் நடத்தினர். அத்துடன் சாரதியிடம் கைத்துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டிய சம்பவம் ஊடகங்களிலும், சமூக வலைத் தளங்களிலும் வைரலாகப் பரவியது. குறித்த தென்மாகாண சபை உறுப்பினர் பயன்படுத்திய துப்பாக்கிக்கு அனுமதிப்பத்திரம் இல்லை. மொட்டுக் கட்சியினர் இவ்வாறு சட்டத்தைக் கையிலெடுத்துச் செயற்படுகின்றவெறியாட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார்.

(ஆ)



# அவை விடுகினமில்லை எண்டு சாட்டுச் சொல்லாட்டிச் சரி

"ஆரைக்கேட்டுக் கதைச்சனீங்கள்" எண்டு ஒருக்காச் சொல்லுங்கோ பாப்பம். உங்கடை எண்ணத்துக்கக் கதையுங்கோ. அவையளோடை சேருங்கோ. பிறகு ஏதேன் பிழை வந்தாப் பிறகு எங்களுக்கத் தெரியாது எண்டு சொல்லப்பிடாது. இப்பிடி தமிழ் தேசியக் கூட்டமைப்பின்ரை கூட்டத்திலை கேட்டது ஆர் எண்டது தெரியுமே? வன்னி எம்பி ஸ்ரீதரன் தான் உப்பிடிக் கதைச்சவர். அவர் கேட்ட கேள்வியிலை எல்லாரும் மலைச்சுப் போச்சினமாம். பிறகு ஒரு மாதிரிச் சமாளிச்சுக் கொண்டு என்ன சொன்னவை எண்டு தெரியுமே? "அது நாங்கள் அவரோடை கதைக்கேல்லை. மதத் தலைவர்களும், வர்த்தக சமூகத்தினரும் தான் பேசினவை. சத்தியமா நாங்கள் நேரடியாக் கதைக்கேல்லை எண்டு தலையிலை அடிச்சு சத்தியம் பண்ணினவராம் மாவை.

ஆனால் ஸ்ரீதரன் விடேல்லை அப்ப ஏன் மாவையும், சுமந்திரனும் ரெலிபோனிலை கதைச்சவை. மதத்தலைவர்களையும், வியாபாரியளையும் கதைக்க விட்டிருக்கலாம் தானே? இவை ஏன் குறுக்கை போனவை. எண்டு விடாமல் கேக்கத் துவங்கிவிட்டாராம். ஸ்ரீதரன் சரியான கோபத்தோடைதான் கதைச்சவராம். பக்கத்திலை இருந்து பாத்த ஆக்கள் சரியாப் பயந்திட்டினமாம். அடிபிடி வந்திடுமோ எண்டு.

எங்கடை ஆள் சொல்லுறார் ஸ்ரீதரன் உந்தக் கதையை முன்னங் கதைச்சிருந்தால் பிரயோசனமா இருந்திருக்கு மெண்டு. இது கலியாணம் செய்தாப் பிறகு, பொம்பிளை கெர்ப்பம் தரிச்சாபிறகு, செய்தது சரியோ? பிழையோ? எண்டு கதைச்சுத் தர்க்கப் படுகிறதாலை ஒரு பலனும் இல்லை. வீணா மனக் கசப்பு வருமே ஒழிய வேறை ஒண்டும் நடக்காது. என்ன? எண்டு

மாவை சரியான குள்ளன் போலை. தான் அவரோடை அரசியல் ஒண்டும் கதைக்கேல்லை எண்டு சொல்லிப்போட்டார். பாப்பம் என்ன கதைச்சவை எண்டு. மலிஞ்சால் சந்தைக்கு வருந்தானே? அப்ப பாப்பம் என்ன கதைச்சவை எண்டு? தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஈபிஆர்எல்எவ்வும் சேந்ததின்ரை பின்னணி பெரிய கதையாம். அவை ஒண்டும் தங்கடை எண்ணத்துக்குச் சேரேல்லையாம். அதுக்குப் பின்னாலை பெருந்தலையளின்ரை தலையீடு இருக்குதாம். அவைதான் பேசிக் கீசி சம்பந்தம் செய்து வைச்சவையாம்.

இப்ப எங்கடை பிரச்சினை அதல்ல. பிரதமர் ஒரு மாதிரி சொல்லிக் கில்லி வெண்டிட்டார். இனி எங்களுக்கு என்னத்தைச் செய்யப் போறார் எண்டு பாப்பம். ஈபிஆர்எல்எவ் சொல்லினம் தாங்கள் ஒரு உடன்படிக்கை செய்திட்டினம் எண்டு. தமிழ் தேசியக் சுட்டமைப்பினரும் சொல்லினம் தாங்களும் ஒரு உடன்படிக்கை செய்திட்டினமெண்டு. ஆர் என்னத்தைச் செய்தாலும் அங்காலை நிக்கிறவங்கள் அதை நடை முறைப்படுத்தக் குறுக்ககாலை நிக்காட்டிச் சரி. ரணில் சொன்னபடி நடக்கப்போக மகிந்தா குறுக்கை விழுந்து படுத்திடுவர். அப்பிடி மகிந்தா படுக்காட்டிலும் பிக்கு கோஷ்டி விழுந்து படுத்திடு மெல்லே. அவை அதுக்குத்தானே எப்ப எண்டு பாத்துக் கொண்டு நிக்கினம். எல்லாரும் விட்டாலும் கொஞ்சம் அங்காலை வாயுக்கை விஷத்தை வைச்சுக் கொண்டு நிக்குதுகளெல்லே அவை விடுவினமோ? அவை விடுகினமில்லை எண்டு உப்பிடி ரணில் ஒரு சாட்டுச் சொல்லாட்டிச் சரி.

- வில்லங்கம் விநாசி

# அடித்து நொருக்கப்பட்ட விளம்பரத் தட்டிகள்

சாவ்கச்சேரி, ஏப். 06

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டு, இதுவரை திறக்கப்படாமல் இருந்த பஸ் தரிப்பு நிலையம், தொழில்நுட்ப ஆய்வு கூடம் மற்றும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த பாடசாலைச் சாதனைகளை வெளிக்காட்டும் விளம்பரத் தட்டி என்பன இனம் தெரியாதவர்களால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கும்பலைச் சேர்ந்தோர் 11 மோட்டார் சைக்கிள்களில் சாவகச்சேரி நகர உள்வீதிகளில் மக்களை அச்சுறுத்தும் பாணியில் ஓடித் திரிந்தனர் என்றும், பின்னர் இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் ரயில் பாதையில் இருந்த கற்களை எடுத்துத் தாக்குதல் நடத்தினர் என்றும் அயலில் உள்ள மக்கள் தெரிவித்தனர். அயலில் உள்ளோர் விழிப்படைய குறித்த நபர்கள் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்னும் திறக்கப்படாத இந்த பஸ் தரிப்பிடம் நவீன முறையில் உருவாக்கப்பட்டது. இதற்கான நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது .

(ஆ-11)

# துப்பாக்கிச் சூடு: இருவர் காயம்!

கொழும்பு, ஏப்.06

கொஸ்கொட பிரதேசத்தில் மோட்டார் சைக்களில் வந்த இரண்டு இனந் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பிரிட்டன் பிரஜை உட்பட இருவர் காயமடைந்துள்ளனர். நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காரில் பயணித்த இருவரே காயமடைந்துள்ளனர். அவர்கள் தற்போது நாகொட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பிரிட்டன் பிரஜையான மொஹமட் இஸ்மாயில் மற்றும் அதுருவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சமன் பெரேரா ஆகியோரே இந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளனர்.

(ஆ)




முஸ்லிம் மாதர் சங்கத்தினரால் சர்வதேச மகளிர் தினம் கொழும்பில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக "பெண்களின் குரல்" அமைப்பின் தலைவி மிதிலா சிறிபத்மநாதன், முஸ்லிம் மாதர் சங்கத் தலைவி பனாஷா தஹா மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(ஆ-11)

மாணவி துஷ்பிரயோகம்:

# ஆசிரியருக்கு கடூழியச் சிறை!

நெடுங்கேணி, ஏப். 06

வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தில் மாணவியை துஷ்பிரயோகம் செய்த ஆசிரியர் ஒருவருக்கு, 20 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு வவுனியா நெடுங்கேணியில் பாட்டியின் பராமரிப்பில் வசித்து வந்த சிறுமி ஒருவர், சாதாரண தரப் பரீட்சைக்காகப் பரீட்சை வினாத் தாள்களைக் கோரியுள்ளார். இதனை அடுத்து, குறித்த சிறுமியை வீட்டுக்கு வரவழைத்த 39 வயதுடைய ஆசிரியர், அவரைத் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், குறித்த நபரைக் கைது செய்து வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

இதன் பிரகாரம், கடந்த 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப் பகிர்வு பத்திரம் வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி, எதிரிக்கு 20 வருட கால கடூழிய சிறைத்தண்டனை விதித்ததுடன் ஒரு இலட்சம் ரூபா அபராதமும், அதனைச் செலுத்த தவறின் ஆறு மாத கால சாதாரண சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மாணவிக்கு 5 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்க வேண்டும் எனவும் தவறின் ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (ஆ)

# வடக்கில் 530 ஏக்கரை விடுவிக்க 880 மில்லியனை கோரும் இராணுவம்

தெல்லிப்பழை,ஏப்.06

வடக்கில் இராணுவத்தினரின் வசமுள்ள 530 ஏக்கர் காணிகளில் இருந்து இராணுவம் வெளியேறுவதற்கு 880 மில்லியன் ரூபா கோரியுள்ள நிலையில், அதனைக் கொடுத்து அந்தக் காணிகளை மீட்பதுக்கு அமைச்சரவைப் பத்திரங்களை தமது அமைச்சு தயாரித்து வருவதாக மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் பொன்னையா சுரேஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் மீளக் குடியேறிய கடற்தொழிலாளர்களுக்கு உதவித் திட்டங்கள் நேற்று வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் பல இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது வாழ்வாதாரத்தை முன்னேற்றமடையச் செய்ய வேண்டியுள்ளது. இந்த யுத்தத்தால் இந்தியாவுக்குச் சென்ற மக்களில் 60 ஆயிரம் பேர் மீண்டும் இங்கு குடியேறுவதுக்காக பதிவு செய்துள்ளனர். இவ்வாறு வருகை தரவுள்ள மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது.

அம் மக்களுக்கும் மேலும் இங்குள்ள மக்களுக்குமாக மொத்தம் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் வீடுகள் அமைத்துக்கொடுக்க வேண்டியுள்ளது. இதன்படி கடந்த 2016 ஆம் ஆண்டு 14 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 60 வீதமான நிதியில், 12 ஆயிரத்து 700 வீடுகள் கட்டப்பட்டன.

அதே போன்று 2017 ஆம் ஆண்டு 9 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 5 ஆயிரம் வீடுகள் மாத்திரமே கட்டப்பட்டிருந்தன. ஒதுக்கப்பட்ட நிதியில் மீதம் ஏனைய உட்கட்டமைப்புக்களுக்காக பயன்படுத்தப்பட்டது. தற்போது 3 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி வீடமைப்பு அதிகாரசபை ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த கால நிலைமைகளால் மக்கள் இழந்தவற்றில் ஏதாவது ஒன்றுக்கான இழப்பீட்டினை வழங்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். இதற்காக எம்மிடம் 32 ஆயிரத்து 800 கோவைகள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றில் எமது இலக்கு 19 ஆயிரம் கோவைகளையாவது நிறைவு செய்ய வேண்டும் என்பதேயாகும்.

அவற்றில் மாதாந்தம் 2000 கோவைகள் வீதம் பூர்த்தி செய்ய வேண்டும். எனவே அதில் உள்ள சிறு சிறு தவறுகளை திருத்தி அவற்றை விரைவாக பூர்த்தி செய்ய அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டியதுடன் அதற்காக நடமாடும் சேவையையும் ஆரம்பிக்கவுள்ளோம்.

காணியற்ற மக்களுக்கு காணிகளை கொள்வனவு செய்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதற்காக அரசாங்கத்துக்கு 680 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது. இவற்றை விட மீளக் குடியமர்ந்த மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதே பிரச்சனையாக வுள்ளது. அதற்காக வடக்கு கிழக்கில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு கலந்தாலோசித்து வருகின்றோம். மாங்குளம் மட்டக்களப்பு பூநகரி போன்ற இடங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

தொழிற்சாலைகளில் கட்டாயமாக வடக்கில் இருந்து 1000 பேருக்கும் கிழக்கில் இருந்தும் 1000 பேருக்கும் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம். அவ்வாறு தொழில்களை வழங்குபவர்களுக்கே வீட்டு திட்டத்தை அமைக்கும் பணியை வழங்கவுள்ளோம். 8 மாவட்டங்களிலும் உற்பத்தி வலயங்களை அமைக்கவுள்ளோம்.

மேலும் படையினர் வசமுள்ள காணிகளில் 530 ஏக்கர் காணிகளை மீள பொதுமக்களிடம் ஒப்படைப்பதுக்கு இராணுவம் 880 மில்லியன் ரூபா நிதிகோரியுள்ளது. இது தொடர்பாக நாம் நிதி அமைச்சுடன் கலந்துரையாடியுள்ளதுடன், இந்நிதியை பெற்று அக்காணிகளை மீளப் பெற்றுக் கொள்வதுக்கான அமைச்சரவை பத்திரங்களை தயாரித்து வருகின்றோம் - என்றார்.

## தொடர்ச்சிகள்

### சிங்கள... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட அமர்வு நேற்று பேரவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகியது. இதன்போது, வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள மயமாக்கல்களை தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற பிரேரணையை முன்மொழிந்தார்.

இந்தப்பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றது. இதன்போது, உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

சிங்கள குடியேற்றங்களை தடுப்பதற்கான உறுதியான தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும், வடமாகாணசபை உறுப்பினர்கள் அனைவரும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சென்று எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என மாகாணசபை உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

அத்துடன், தமிழர் சுதந்திரத்தைப் பறித்து மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்திற்கு வழி சமைக்க வேண்டாமென்றும் வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்தார்.

இதற்கமைய, உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்தின் பின்னர், எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9.00 மணியளவில் வடமாகாண முதலமைச்சர் தலைமையிலான வடமாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவரும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு சென்று வெலிஓயா மற்றும் கிதுள்ஓயா உள்ளிட்ட பகுதிகளைப் பார்வையிடுவதுடன், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினையும் முன்னெடுக்கவுள்ளனர்.

இதேபோல் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை நிறுத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதற்காக, மாகாணசபை உறுப்பினர்கள் விரைவில் வடமாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து பேசுவதெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

### கருமங்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசியல் யாப்பில் மக்கள் தமது கருமங்களை தாமே முன்னெடுக்கக் கூடிய வகையில், அதிகாரங்கள் பகிரப்படுவதனையும் அத்தகைய அதிகாரங்கள் மத்திய அரசினால் மீளப்பெறமுடியாத வகையிலும் மத்திய அரசு அந்த அதிகாரங்களில் தலையிடமுடியாத வகையிலுமான ஒரு கட்டமைப்பையே எதிர்பார்க்கிறோம்.

இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் மிகவும் நியாயமான வகையிலேயே செயற்படுகிறோம். ஆனால் இந்த கருமங்களை அரசாங்கம் செய்யத் தவறும்பட்சத்தில் எம்மத்தியில் உள்ள தீவிரசெயற்பாட்டாளர்களுக்கு அது ஒரு உந்துசக்தியாக அமைவதோடு நாமும் மிக கடுமையான ஒருநிலைப்பாட்டினை எடுக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்படுவோம் எனவும் தெரிவித்தார்.

பல கைதிகள் எந்தவொரு விசாரணையுமின்றி பல வருடங்களாக சிறைகளில் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் மேலும் தாமதங்களின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

### மகிழ்ச்சியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ தீர்மானம், நம்பிக்கையில்லா தீர்மான வாக்கெடுப்பின் போது அவையில் பிரசன்னமாகாதிருக்க வேண்டுமென்பதல்ல. நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தமையினால் வேறு கட்சிகளுக்கு செல்வதாக அர்த்தப்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

### புதுக்குடியிருப்பு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும் அவை அகற்றப்படவில்லை இதனால் அபிவிருத்திக்குழுவில் உறுதியளித்த தீர்மானத்தை நிறைவேற்றாது இராணுவம் உதாசீனம் செய்துள்ளது எனவும் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்க கோரியும் இல்லையேல் தாம் சிறுபோகத்தை கைவிடுவதாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக கடந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்வேறு தரப்பினரிடமும் முறையிட்டு பல்வேறு போராட்டங்களை நடத்திய மக்களுக்கு தீர்வாக இராணுவம் குறித்த இயந்திரங்களை அகற்றியுள்ளமை குறிபபிடத்தக்கது.

### சாவகச்சேரியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளையும் தமிழர் விடுதலை கூட்டணி 2 ஆசனங்களையும் சுயேட்சைக்குழு 1 ஆசனத்தையும் பெற்றுள்ளன.

தவிசாளரை தெரிவு செய்வதற்கான முதலாவது அமர்வு வடமாகாண உள்ளூராட்சி ஆணையளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்று காலை இடம்பெற்றது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சார்பில் க.வாமதேவன் பிரேரிக்கப்பட்டதுடன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் க.சதீஸ்வரன் தவிசாளர் வேட்பாளராக பிரேரிக்கப்பட்டார்.

பகிரங்கமாக இடம்பெற்ற தவிசாளருக்கான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் பிரேரிக்கப்பட்ட க.வாமதேவன் 23 வாக்குகளை பெற்று தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அவரை எதிர்த்து போட்டியிட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் 6 வாக்குகளைப் பெற்றார்.

இதைத்தொடர்ந்து இடம்பெற்ற உப தவிசாளர் தெரிவின்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செல்வரத்னம் மயூரன் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச சபையை போட்டியின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது.

நேற்று பிற்பகல் இரண்டு மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேசசபை மண்டபத்தில் வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது.

தவிசாளர் தெரிவுக்கு கோரப்பட்டபோது இலங்கை தமிழரசு கட்சியின் சுப்பிரமணியம் சுரேன் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

இதனை தொடர்ந்து உபதவிசாளர் தெரிவிலும் போட்டியின்றி தமிழரசுக் கட்சியின் முத்துகுமார் சுஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### வலி.வடக்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் 16 ஆம் திகதி மேற்படி காணிகள் விடுவிக்கப்படவுள்ளதுடன் அன்றைய தினம் அராலி பருத்தித்துறை வீதியானது காலை ஆறு மணி தொடக்கம் மாலை ஆறு மணி வரை திறந்து விடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் அங்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட முட்கம்பி வேலிகள் முகாம்கள் அங்கிருந்து அகற்றும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

பலாலி விமான நிலையத்திற்கு அண்மைய காணிகள், வறுத்தலைவிளான், கட்டுவன் சந்தி அச்சுவேலி வீதி, கட்டுவன்- மயிலிட்டி வீதி அதனை சுற்றியுள்ள காணிகள், மயிலிட்டி துறைமுகத்திற்கு முன்னால் உள்ள காணிகள் என்பன விடுவிக்கப்படவுள்ளன.

இக்காணிகள் எதிர்வரும் புத்தாண்டு தினத்தன்று மக்களிடம் கையளிக்கப்படும் என அங்கு பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரிடம் கேட்ட போது தெரிவித்தனர்.

மேலும் அன்றைய தினம் பருத்தித்துறை - பொன்னாலை வீதியும் முழுமையாக பொதுப்பாவனைக்காக திறந்து விடப்படவுள்ளது. தற்போது இவ்வீதியூடாக போக்குவரத்து சபை பஸ் மட்டும் சேவையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### பதவி விலகல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாசிறி ஜெயசேகர நேற்று இரவுதெரிவித்தார்.

பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் எஸ்.பி.திசாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, தயாசிறி ஜெயசேகர, அநுர பிரியதர்சன யாப்பா, சந்திம வீரக்கொடி மற்றும் செனவிரத்ன ஆகியோர் வாக்களித்தனர்.

அவர்கள் ஆறு பேரையும் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு பிரதமரிடம் கோரியிருந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 33 பேர், தற்போது அவர்கள் 6 பேருக்கும் எதிராக நம்பிக்கையில்லா பிரேணையை இன்று சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த நிலையிலேயே அமைச்சர் தயாசிறி ஜெயசேகர இந்த தகவலைத் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் நேற்று காலை ஜனாதிபதியைச் சந்தித்திருந்தனர்.

"நாம் அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதாக ஜனாதிபதியிடம் கடிதங்களைக் கையளித்தோம். அவற்றை நிராகரித்த ஜனாதிபதி, அமைச்சுப் பதவிகளில் தொடருமாறு வலியுறுத்தினார். அத்துடன் கூட்டு அரசில் தொடர்வோம் என்றும் தெரிவித்தார்" என்று அமைச்சர் தயாசிறி ஜெயசேகர கூறினார்.

### ஆப்பு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கு இருக்க முடியாது எனவும், அவ்வாறு இருப்பது பண்பாடான ஒரு நடவடிக்கை அல்லவெனவும் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தற்பொழுது வரை 15 ஐ.தே.க. வின் எம்.பி.க்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாதவர்களை அரசாங்கத்துக்குள் வைத்திருப்பது பொருத்தமானது அல்லவெனவும் அந்த பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களே நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

சுசில் பிரேமஜெயந்த, தயாசிறி ஜெயசேகர, டிலான் பெரேரா, ஜோன் செனவிரத்ன, லக்ஸ்மன் வசந்த பெரேரா, சுதர்சனி பெர்னான்டோ புள்ளே, தாரநாத் பஸ்நாயக்க, சுசந்த புஞ்சிநிலமே, அனுர பிரியதர்சன யாப்பா, எஸ்.பி.திசநாயக்க, லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன, சந்திம வீரக்கொடி, அனுராத ஜெயரத்ன, சுமேதா ஜெயசேன, ரி.பி.எக்கநாயக்க, திலங்க சுமதிபாலஆகியோரே அவர்களாவர்.

# ஜீன்ஸ் அணியும் பெண்களுக்கு திருநங்கைகள் பிறப்பார்களாம்

## கேரளாவில் சர்ச்சை

காசர்கோடு, ஏப். 06

ஆண்களைப் போல ஜீன்ஸ் அணியும் இளம்பெண்களுக்கு திருநங்கைகள்தான் பிறப்பார்கள் எனக் கேரளாவைச் சேர்ந்த தாவரவியல் பேராசிரியர் ரெஜித் குமார் கூறியிருக்கின்றமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



கேரள மாநிலம் காலடியில் உள்ள ஸ்ரீ சங்கரா சமஸ்கிருத பல்கலைக்கழகத்தில் தாவரவியல் பேராசிரியராக பணியாற்றி வருபவர் ரெஜித் குமார். இவரைக் கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தக் கேரள மாநில அரசு நியமித்துள்ளது. அதன்படி, அவர் காசர்கோடு நகரில் உள்ள ஒரு கல்லூரியில் விழிப்புணர்வு வகுப்பு நடத்தச் சென்றார். அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஆண்களைப் போல ஜீன்ஸ் அணியும் இளம்பெண்கள் கேரளாவில் அதிகமாக உள்ளனர். இதனால்தான், கேரளாவில் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட திருநங்கைகள் உள்ளனர். மேலும், நல்ல நடத்தை இல்லாத பெற்றோரின் குழந்தைகள், ஆட்டிசம் மற்றும் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்படுவார்கள்" என அவர் தெரிவித்தார்.

அவரது பேச்சால் மாணவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். மாநிலம் முழுவதும் இந்தக் கருத்து சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இருப்பினும், பேராசிரியர் ரெஜித் குமார் தனது கருத்தை வாபஸ் பெறவில்லை.

இதனால், அவர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அரசு சார்பிலான விழிப்புணர்வு வகுப்புகள் நடத்த அவரை அனுமதிக்க மாட்டோம் என்றும் கேரள சுகாதாரத்துறை மந்திரி கே.கே.சைலஜா தெரிவித்தார்.

பேராசிரியர் ரெஜித் குமார் திருவனந்தபுரத்தில் ஒரு பெண்கள் கல்லூரியில் இதேபோல் பெண்களுக்கு எதிரான கருத்துகளைத் தெரிவித்துக் கடும் எதிர்ப்பை சம்பாதித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)



# ஆடு மேய்க்கும் பிரபல நடிகை

தேவரிந்துப்பள்ளி, ஏப். 06

பிரபல திரைப்பட நடிகையான பிந்து மாதவி சொந்த ஊரில் ஆடு மேய்ப்பது போன்ற புகைப்படத்தைத் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

தமிழ் சினிமாத்துறையில் தற்போது வேலை நிறுத்தம் நடந்துவருவதால், திரைப் பிரபலங்கள் பலர் தங்கள் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட்டு வருகின்றனர். அதில் குறிப்பாக நடிகர் விக்ரம் தனது குடும்பத்துடன் கேரளாவுக்கும், நடிகை நயன்தாரா நீண்ட நாட்களுக்குப் பிறகு, கொச்சினில் உள்ள தனது சொந்த வீட்டுக்கும் சென்றுள்ளனர்.

இந்த நிலையில், நடிகை பிந்து மாதவி தனது சொந்த ஊரான ஆந்திர மாநிலத்தில் உள்ள தேவரிந்துப் பள்ளிக்குச்சென்றுள்ளார். அங்கு அவர் ஆடுமேய்ப்பது, குலதெய்வக் கோவிலுக்குச் செல்வது, மண்பானையில் சமைப்பது போன்ற புகைப்படங்களை டுவிட்டரில் பகிர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)



# கிரிக்கெட் வீரர்களை சிறை பிடிப்போம் !

## அன்சாரி ஆவேசம்

புதுடில்லி, ஏப்.06

ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்கும் கிரிக்கெட் வீரர்களைச் சிறை பிடிப்போம் என மனிதநேய ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளர் தமிமுன் அன்சாரி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் வைத்து நேற்றுமுன்தினம் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"காவிரி விவகாரத்தில் பா.ஜ.க. தவிர எந்தக் கட்சி போராட்டம் நடத்தினாலும் ஆதரவு வழங்க எங்கள் கட்சியின் தலைமை நிர்வாகக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, தமிழகத்தில் இடம்பெறும் போராட்டங்களுக்கும் ஆதரவு அளிக்கத் தீர்மானித்துள்ளோம். எதிர்வரும் 10 ஆம் திகதி சென்னையில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி நடக்க உள்ளது. காவிரி மேலாண்மை வாரிய விவகாரத்தில் மக்கள் கொந்தளித்துப் போராட்டம் நடத்திவரும் இந்த நிலையில், விவசாயிகள் வாடி வதங்கும் சூழ்நிலையில் ஐ.பி.எல். போட்டியை நடத்துவது தமிழகத்துக்கு மானக்கேடு ஆகும். போட்டியைத் தமிழக அரசு ரத்துச் செய்யவேண்டும். இல்லையென்றால், எங்கள் கட்சியின் ஆயிரக் கணக்கான தொண்டர்கள் மைதானத்துக்குள் நுழைந்து போட்டியை தடுத்து நிறுத்துவோம். போட்டியில் பங்கேற்கும் கிரிக்கெட் வீரர்களையும் சிறை பிடிப்போம்." என்று தெரிவித்தார். (ஆ)

# பாகிஸ்தானில் 139 தீவிரவாதிகள்!

நியூயோர்க், ஏப்.06

பாகிஸ்தானில் இருந்து 139 தீவிரவாத அமைப்புகளின் தலைவர்கள் ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் தீவிரவாதப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. சபையின் பாதுகாப்புக் கவுன்சில் தீவிரவாத மற்றும் கிளர்ச்சி இயக்கங்கள் குறித்த பட்டியல் ஒன்றை சமீபத்தில் வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் பாகிஸ்தானில் இருந்து மட்டும் 139 தீவிரவாத இயக்கங்களின் தலைவர்கள் இடம் பெற்றுள்ளனர்.

மேலும், ஒசாமா பின்லேடனின் வாரிசு அய்மன் அல்-ஸவாகிரி, லஷ்கர் இ தாய்பா தலைவர் ஹபீஸ் சயீது, இந்தியாவால் தேடப்பட்டு வரும் தாவூத் இப்ராஹிம் ஆகியோர் பாகிஸ்தானில் வாழ்ந்து வருகின்றனர் என அந்தப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. லஷ்கர் இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் ஹாஜி முகம்மது, அப்துல் சலாம், ஸபார் இக்பால் ஆகியோரும் அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, பாகிஸ்தானில் இருந்து கொண்டு ஆப்கானிஸ்தானில் பல தாக்குதல்களை நடத்தும் பல்வேறு குழுக்களும் இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளன. எனினும், உலகம் முழுவதிலும் இருந்து எத்தனை இயக்கங்கள் இடம் பெற்றுள்ளன என்ற தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ஆ)

# பேஸ்புக் தகவல் கசிவு: மார்க் வாக்குமூலம்!



வொஷிங்டன், ஏப்.06

பல லட்சக்கணக்கான பேஸ்புக் பயனாளிகளின் தனிப்பட்ட தகவல்கள் கசிந்த விவகாரம் தொடர்பில் எதிர்வரும் 11 ஆம் திகதி அமெரிக்க நாடாளுமன்றக் குழு விசாரணையில் பேஸ்புக் தலைமை செயல் இயக்குநர் மார்க் ஸூகர்பேர்க் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க உள்ளார்.

சமூக வலைத்தளங்களின் ஜாம்பவனாக விளங்கும் பேஸ்புக் நிறுவனத்தினால் சமீபத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக சுமார் 5 கோடி அமெரிக்க மக்களின் தகவல்களை பேஸ்புக் நிறுவனம், லண்டனைச் சேர்ந்த கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா என்னும் நிறுவனத்துக்கு வழங்கியதாக பகிரங்கமான குற்றச்சாட்டு வெடித்தது.

இதுதொடர்பாக விசாரணை நடத்த அமெரிக்க நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் முன்னர் பேஸ்புக் தலைமை செயல் இயக்குநர் மார்க் ஸூகர்பேர்க் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க உள்ளார்.

இணையத்தளங்களில் பதிவிடப்படும் தங்களைப்பற்றிய தகவல்கள் என்னவாகின்றன? என்னும் தகவல் பாதுகாப்பு அம்சம் தொடர்பாக அமெரிக்க மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள இந்த விசாரணை ஒரு முக்கிய வாய்ப்பாக இருக்கும். இந்த விசாரணையில் ஆஜராக சம்மதம் தெரிவித்துள்ள மார்க் ஸூகர்பேர்கின் முடிவை நாங்கள் வரவேற்கிறோம்' என அமெரிக்க நாடாளுமன்ற விசாரணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.(ஆ)



# எறும்பு கடித்து பெண் சாவு!

ரியாத், ஏப்.06

சவுதி அரேபியத் தலைநகர் ரியாத்தில் விஷ எறும்பு கடித்ததில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டத்தில் உள்ள அடூர் பகுதியை சேர்ந்தவர் சூசி ஜெஃப்பி (வயது-36).

அவர் தனது குடும்பத்தாருடன் சவுதி அரேபியாவில் வசித்து வந்தார். இந்த நிலையில், கொடிய விஷத்தன்மை வாய்ந்த ஒருவகை எறும்பு கடித்ததால் நச்சுத்தன்மை முறிவுச் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சூசி சேர்க்கப்பட்டார். இதனை அடுத்து, சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்துள்ளார். (ஆ)

# அம்பேத்கரின் பெயரை பயன்படுத்தி அரசியல்



புதுடில்லி, ஏப்.06

அம்பேத்கரின் பெயரை எல்லோரும் அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால், எங்கள் அரசுதான் அம்பேத்கர் சர்வதேச மையத்தைக் கட்டி முடித்துத் திறந்து வைத்தது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கான விரிவாக்கக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அம்பேத்கரின் உயிர் பிரிந்த அலிப்பூர் சாலை இல்லம், அவருடைய பிறந்தநாளுக்கு முன்பு நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படும். முந்தைய காங்கிரஸ் அரசு இந்தப் பணியைப் பல ஆண்டுகளாக இழுத்தடித்தது. நாங்கள் உரிய காலத்தில் முடித்து விட்டோம். எமது அரசைப் போல் வேறு எந்த அரசும் அம்பேத்கருக்கு மரியாதை செய்யவில்லை." என்று அவர் தெரிவித்தார். (ஆ)

# முதலிடத்தில் இங்கிலாந்து

சிட்னி,ஏப்.06

கொமன்வெல்த் போட்டியின் முதல் நாளில் இங்கிலாந்து 6 தங்கத்துடன் 12 பதக்கங்கள் வென்று முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

அவுஸ்ரேலியாவின் கோல்ட் கோஸ்டில் கொமன்வெல்த் போட்டி நேற்றுமுன்தினம் கலை நிகழ்ச்சியுடன் தொடங்கியது. தொடக்க நாளாகிய நேற்று இங்கிலாந்து 6 தங்கம், மூன்று வெள்ளி, மூன்று வெண்கலத்துடன் 12 பதக்கங்கள் வென்று முதல் இடத்தை பிடித்துள்ளது.

போட்டியை நடத்தும் அவுஸ்ரேலியா 5 தங்கம், 4 வெள்ளி, 6 வெண்கலத்துடன் 15 பதக்கங்கள் பெற்று 2-வது இடத்தை வகிக்கிறது. மலேசியா 2 தங்கங்களுடன் 3-வது இடத்தைப் பிடித்துள்ளது.

| Rank | Nation | G | S | B | Total |
|---|---|---|---|---|---|
| 1 | England | 6 | 3 | 3 | 12 |
| 2 | Australia | 5 | 4 | 6 | 15 |
| 3 | Malaysia | 2 | 0 | 0 | 2 |
| 4 | Canada | 1 | 3 | 3 | 7 |
| 5 | Scotland | 1 | 2 | 2 | 5 |
| 6 | New Zealand | 1 | 2 | 0 | 3 |
| 7 | India | 1 | 1 | 0 | 2 |



# வரவேற்பு

மும்பை,ஏப்.06

டிஆர்எஸ் மற்றும் சர்வதேச போட்டியில் விளையாடாத வீரர்களின் மாற்றம் ஆகிய முடிவுக்கு ரோகித் சர்மா, ஜெயவர்தன ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஐபிஎல் கிரிக்கெட் திருவிழாவின் 11-வது சீசன் நாளை மும்பையில் தொடங்குகிறது. இந்த தொடரில் இருந்து டிஆர்எஸ் முறைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல் சர்வதேச போட்டிகளில் விளையாடாத வீரர்கள் பாதி தொடரின்போது, இரண்டு போட்டிகளுக்கு மேல் விளையாடவில்லை எனில், அடுத்த அணி ஏலத்தில் எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு முடிவை மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ரோகித் சர்மாவும், அந்த அணியின் தலைமை பயிற்சியாளர் ஜெயவர்தனவும் வரவேற்றுள்ளனர்.

இதுகுறித்து ஜெயவர்தன கூறுகையில் "ஐபிஎல் அணிகள் புதுமையான வகையில் முன்னேற இந்த முறைகள் பரிணாமமாகும். இது ஒரு சிறந்த தெரிவு. ஒரு தொடரின் பாதியில் அணிகள் தங்களை புதுப்பித்துக் கொள்ள அருமையான வாய்ப்பாகும்.

மிட்-சீசன் டிரான்பர் விண்டோ ஒரு அணிக்கு எந்தமாதிரியான வீரர்கள் தேவை என்பதையும், மற்ற அணிகள் எந்த வீரர்களை எடுக்கலாம் என்பதையும் எதிர்பார்க்கக் கூடிய வசதியைப் பெறும். இது அனைத்தும் வீரர்களை அணிகள் பெறுவது அல்லது வெளியேற்றுவதை சார்ந்தது.

டிஆர்எஸ் சர்வதேச போட்டியில் பயன்படுத்தப்படுகிறது. தற்போது ஐபிஎல் தொடரில் அறிமுகப்படுத்தப்படுகிறது. தவறுகள் நடப்பதுதான். டிஆர்எஸ் அதற்கு உதவியாக இருக்கும். இதனால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதை எப்படிக் கையாள வேண்டும் என்பது சர்வதேச வீரர்களுக்கு தெரியும். இளம் வீரர்களுக்கு கற்றுக் கொள்ளும் சிறந்த அனுபவமாக இருக்கும்" என்றார்.



# ஓராண்டு தடையை முழுமையாக ஏற்கும் வோர்னர்

சிட்னி,ஏப்.06

அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர் டேவிட் வோர்னர் தன் மீதான ஓராண்டுத் தடையை முழுமையாக ஏற்பதாகவும், மேல்முறையீடு செய்யப்போவதில்லை என்றும் அறிவித்துள்ளார்.

பந்தை சேதப்படுத்திய விவகாரம் தொடர்பாக அவுஸ்ரேலிய வீரர்களான டேவிட் வோர்னர் ஸ்டீவன் ஸ்மித் ஆகியோருக்கு ஓராண்டு தடையும், பான்கிராப்டுக்கு 9 மாதங்கள் விளையாட தடையும் விதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தங்கள் மீதான தடையை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதில்லை என ஸ்டீவன் ஸ்மித்தும், பான்கிராப்டும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், ஸ்மித் மற்றும் பான்கிராப்ட் போல தானும் தடையை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதில்லை என டேவிட் வோர்னர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'என் மீதான ஓராண்டுத் தடையை முழுமையாக ஏற்பதாக, அவுஸ்ரேலியாவுக்குத் தெரியப்படுத்துகிறேன். என்னுடைய நடவடிக்கைகளுக்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்.

சிறந்த மனிதனாக, சிறந்த வீரராக, சிறந்த Role model ஆக இருப்பதற்கான அனைத்து நல்ல விடயங்களையும் இனி நான் செய்வேன்' என தெரிவித்துள்ளார்.

# முதுகு வலியால் அவதியுறும் ரபாடா

ஜொகன்னஸ்பேர்க்,ஏப்.06

தென்னாபிரிக்க அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ரபாடா முதுகு வலி காரணமாக 3 மாதம் கிரிக்கெட்டில் இருந்து விலகியுள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ரபாடா, சமீபத்தில் முடிவடைந்த அவுஸ்ரேலியாவுக்கு எதிரான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா 3-1 என கைப்பற்ற முக்கிய காரணமாக இருந்தார். அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய ரபாடா தொடர் நாயகன் விருதை பெற்றார்.

இவர் ஜோகன்னஸ்பேர்க்கில் நடைபெற்ற கடைசி டெஸ்டின்போது முதுகு வலியால் அவதிப்பட்டார். இதனால் சுமார் மூன்று மாதம் கிரிக்கெட்டில் இருந்து விலகி இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதனால் ரபாடா ஐபிஎல் தொடரில் பங்கேற்கமாட்டார் என்பது உறுதியாகியுள்ளது. டெல்லி டேர்டெவில்ஸ் அணி 4.2 கோடி ரூபாய் கொடுத்து ரபாடாவை ஏலம் எடுத்தது குறிப்பிடத்தக்கது.

# ஜொஹன்னா கொண்டா அதிர்ச்சித் தோல்வி

அமெரிக்காவின் தென் கரோலினாவில் நடைபெற்று வரும் மகளிருக்கான வொல்வோ பகிரங்க டென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றில் பிரிட்டனின் முன்னணி வீராங்கனை ஜொஹன்னா கொண்டா அதிர்ச்சித் தோல்வியுடன் வெளியேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற இரண்டாவது சுற்றுப்போட்டியில் 22ம் நிலை வீராங்கனையான கொண்டா, ஹங்கேரியின் நிலை வீராங்கனையான பென்னி ஸ்டொல்லரை எதிர்கொண்டு விளையாடினார்.

ஆரம்பம் முதல் ஆதிக்கத்தை செலுத்தி விளையாடிய பென்னி ஸ்டொல்லர் கொண்டாவை 2-0 என வீழ்த்தி அபார வெற்றிபெற்றார்.

முதல் செட்டை 6-3 என கைப்பற்றிய பென்னி ஸ்டொல்லர், இரண்டாவது செட்டை, 6-4என இலகுவாக கைப்பற்றி, அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.





# இலங்கைக்கு இரண்டு பதக்கங்கள்

21வது பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியில் இலங்கைக்கு இரண்டு வெண்கலப் பதக்கங்கள் கிடைத்துள்ளன.

ஆண்களுக்கான 56 கிலோகிராம் பழுதூக்கும் போட்டியில் இலங்கையின் சதுரங்க லக்மால் ஜயசூரிய வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளார்.

அதேபோன்று பெண்களுக்கான 48 கிலோ எடை பிரிவில் பழுதூக்கும் போட்டியிலும் இலங்கை வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

இலங்கையின் தினூஷா கோம்ஸ் இந்தப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 06.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.